REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்..அண்ணுதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 4௨ புதன் (16—2—55) ★ ★ வெளியூர்: மாசி 5௨ வியாழன் (17—2—55) [இதழ் 210

காட்டு ஈக்கள் படையெடுப்பின் எதிரொலி

திருமணக் கூட்டம் விரண்டோடியது

கைரியா மாவட்டத்தில் உள்ள இஜேஜ் கிராமத்தின் தோப் பொன்றில் புதிதாக மணம் செய்துகொண்ட தம்பதிகளும், அவர் கள் சுற்றத்தார்களும் பொழுதுபோக்கிற்காகத் தங்கியிருந்தனர். அங்கிருந்த மரத்தடியில், தின்பண்டங்களைத் தயாரிக்க அடுப்பை மூட்டினுர் ஒரு பெண்மணி.

புகை மேலே உயர்ந்து சென்றதும், அதைத் தாங்கிக்கொள்ள முடியாது மரத்தின்மேலிருந்த காட்டு ஈக்கள் அடுப்பு மூட்டிய பெண்ணைக் கொட்டத் தொடங்கின; அத்துடன் மற்றவர்களையும் கொட்ட அணுகின. ஈக்களின் படையெடுப்பிற்கு ஆற்ருதவர்க ளாக அத்திருமணக் கூட்டம் விரண்டோடிவிட்டது.

சீர்திருத்தப் பணி மக்களின் வாழ்வை செப்பனிடத்தான்!

வேறெவரையும் புண்படுத்த அல்ல!

பெங்களூர் சமூக சீர்திருத்த மாநாட்டில் தோழர் ப. உ. சண்முகம் திறப்புரை

"பழைமை குடிகொண்டுள்ள ஊர் பெங்களூர் நகர்; இங்கு புதுமை எண்ணங்கள் மக்களின் உள்ளங்களிலே மலரச் செய் வதற்காக, இந்தச் சமூக சீர்திருத்த மாநாடு நடத்தப்படுகிறது.

"சீர்கெட்டுப் போயுள்ள இந்தச் சமூகத்தைப் பற்றி நம்மைத் தவிர—திராவிடரியக்கத்தைத் தவிர வேறு யாரும் கவலைப்படுவ தில்லை.; வேறு பல அரசியல் இயக்கங்களிலிருந்து நாம் பிரிவது இந்த இடத்திலிருந்துதான்.

"நாம்—'நமது திராவிடர் சமுதாயம் திருந்த வேண்டும்; முன்னுக்கு வரவேண்டும்; நாகரீகம் பெறவேண்டும்,' என்று விரும்புகிருேம்.

"'திராவிடர்களிடையே நிரம்பிக்கிடக்கிற குருட்டுப் பக்தியும், கடவுள் நம்பிக்கையும், மதவாதமும், பழைமை எண்ணங்களும் மூடப்பழக்கங்களும் அகல வேண்டும்; மக்கள் பகுத்தறிவு பெற்ற வர்களாய், எதையும் சிந்தித்துச் செயல்படுபவர்களாயிருக்க வேண்டும்,' என்று விழைகிருேம்; இதற்காக—இந்தச் சீர்திருத் தத்தை மக்களிடையே மலரச் செய்வதற்காக—அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிற கடவுளர்கள், அவர்களை அடையத் தோன்றியுள்ள மதங்கள், அவை கூறும் சடங்குகள் இவை எல்லாம் எப்படி அறிவுக்குப் புறம்பானவை—ஆபாசமானவை என்பதை எடுத்தியம்புகிருேம்

"இதைத் தவிர, மதவாதிகளையோ, கடவுள் நம்பிக்கைக் காரர்களையோ, மத குருக்களையோ கிண்டல் செய்ய வேண்டும் என் பதல்ல நமது நோக்கம்."

—இவ்வாறு, கர்நாடக தி. மு. கழக முதல் சமூக சீர்திருத்த மாநாடு கடந்த 12—2—55 சனியன்று பெங்களூர் நகரில் பினாக் பன்னி மைதானத்தில் நடைபெற்றபோது, அதனைத் துவக்கிவைத்துப் பேசிய தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"மக்கள் சீரியதொரு வாழ்வு பெற, அவர்கள் மனம் பக்குவப் பட்டதாக இருக்க வேண்டும்; நல்ல நிலத்திலும்கூட தேவை யான விதைகளைத் தூவிப் பயிரிடு வதற்கு முன் நிலத்தைப் பண் படுத்துவது போல, மக்களின் நல்வாழ்விற்கான அரசியல், பொரு ளாதார அமைப்பில் மாற்றங்கள் நிலை பெறச் செய்ய, அவர்கள் உள்ளத்தைப் பண்படுத்த வேண் டும் என்று நாம் விரும்புகிருேம்

"மக்களின் உள்ளத்தைப் பண் படுத்துகிற வேலையை நாம் மேற் கொண்டுள்ளபோது, பலர் நம்மீது கோபமும், ஆத்திரமும் பல கார ணங்களுக்காகக் கொள்வதைப் பார்க்கிருேம். அவற்றை நாம் பொருட்படுத்தாமலேயே தொடர்ந்து இப்பணியைச் செய்து வருகிருேம்.

"'மதம் பழிக்கப்படுகிறது; ஆண் டவர்கள் இழித்துரைக்கப்படுகிருர் கள்; ஆஸ்திகம் அழிக்கப்படுகிறது' —என்று கூச்சல் போடுவோர், 'இதென்ன பெரிய காரியம்' என்று ஏளனம் பேசுவோர், 'இது ஒன் றும் இப்போது தேவை இல்லை,' என்று அலட்சியப்படுத்துவோர் ஆகியோரெல்லாம் ஒன்று சேர்ந்து ஒருமுகமாக எதிர்த்தாலும், இடை விடாது நாம் இந்தச் சீர்திருத்தப் பணியினைச் செய்துவருகிருேம்,'

தொடர்ந்து பேசிய சண்முகம் அவர்கள், நாட்டிலே கடவுளர் களின் பெயரால், மதங்களின்பெய ரால் புகுத்தப்பட்டிருக்கிறபுராண, இதிகாச ஏடுகளிலிருந்து சில காதைகளை எடுத்துக்காட்டி, அவை எத்துணை அநாகரீகமாயிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டினுர்.

சமூகத்திலே ஏற்றத் தாழ்வு களைப் போதிக்கும் வருணச்சிரம தர்மம் நிலைக்க வேண்டுமென்பதற் காக எத்தனை புண்ணிய காதை களில் அந்த ஏற்றத் தாழ்வுகளுக்கு நியாயம் கூறப்படுகின்றன என் றும் எடுத்தியம்பி, அந்த ஏற்றத் தாழ்வுகள் இன்று போக்கப்பட வேண்டுமானுல் அந்தப் புராண, இதிகாச போதனைகள் மக்க ளிடையேயிருந்து அகற்றப்பட வேண்டும் என்றும், பல கடவுள் கள், மதம் ஆகியவை ஒரு சிலரின் ஏமாற்று வித்தை என்றும் விளக்கி, சீர்திருத்தப் பணி எவ்வளவு தூரம் இந்தச் சமூகத்திற்குத் தேவை யானது என்பதையும் வெகு விளக்கமாகப் பேசினுர்.

நேரு - நாசர் சந்திப்பு

இந்தியப் பிரதமர் பண்டிதநேரு, 15-ந் தேதி காலை கெய்ரோவுக்கு விமான மூலம் வந்தார். எகிப்து பிரதமர் கர்னல் நாசர் வரவேற் ருர்.

இருவரும் சந்தித்த சில மணி நேரத்திற்குள் பேச்சு வார்த்தை கள் நடத்தினர். சர்வதேச நிலை பற்றியும், தூரக் கிழக்கு, மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைகள் பற்றியும் தாங்கள் விவாதித்ததாக நேரு தெரிவித்தார். மீண்டும் அவர்களிருவரிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கர்நாடகத்தில் உருக்குத் தொழிற்சாலை!

கே. சி. ரெட்டி சூசக அறிவிப்பு

ஹுப்ளி, பிப். 15—

கர்நாடகப் பகுதியில், பெல்லாரி, கார்வார் பிரதேசத்தில் இரும்பு, உருக்கு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை பரீட்சார்த்த மாக நிறுவுவது பற்றி மத்திய அரசாங்கம் யோசித்துக்கொண் டிருப்பதாக உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி, இங்கு குறிப்பிட்டிருக்கிருர்.

முதலில் ஆரம்பிக்கப்படும் பரீட்சார்த்தத் தொழிற்சாலை வெற்றி பெறுமானுல் ஒரு பெரும் தொழிற்சாலையையே அந்தப் பிரதேசத்தில் நிறுவுவது பற்றி முடிவெடுக்கப்படும் என்றும் மந்திரி கருத்தறிவித்திருக்கிருர்.

உலோகக் கனிப்பொருள்கள் மிகுந்த கார்வார், பெல்லாரி பகுதி யில் ஒரு இரும்புத் தொழிற் சாலையை நிறுவ வேண்டுமெனக் கோரி கர்நாடக வர்த்தகக் கழகத் தார் மந்திரியிடம அறிக்கை ஒன்று தந்தனர்.

அந்த அறிக்கைக்குப் பதிலளிக் கையில் மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும், 'உருக்கும் மின்சக்தி யும், தொழிலபிவிருத்திக்கு மிக முக்கியமானவை என்பதில் எவ ருக்கும் கருத்துவேற்றுமை இல்லை; அமெரிக்கா ரஷ்யா ஆகிய நாடு களின் உருக்கு உற்பத்தியோடு ஒப்பிடுகையில் இந்தியாவின் உற் பத்தி மிகக் குறைவாகத்தான் இருக்கிறது; உருக்கு உற்பத் தியை அதிகரிப்பதால் இந்தியா தனது முயற்சிகள் அத்தனையை யும் மேற்கொள்ளத்தான் செய்யும்,'

கர்நாடகப் பகுதியில் உருக்குத் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றி முடிவு செய்யுமுன், தேவையான போக்குவரத்து வசதி, மின்சக்தி இவை போன்றவை எல்லாம் கவ னிக்கப்பட வேண்டும் என்றும், தொழிற்சாலை நிறுவுவது என்று நிர்ணயிக்கப்படும் இடம் இந்த வசதிகள் எல்லாம் உடையதா யிருந்தால் அங்கேயே ஒரு தொழிற் சாலை நிறுவப்படும் என்றும், தொழிற்சாலை நிறுவுவது என்று முடிவெடுக்கப்படும்போது கர்நாட கத்தின் கோரிக்கையும் திறந்த மனதுடன் கவனிக்கப்படும் என் றும் மந்திரி ரெட்டி குறிப்பிட்டிருக் கிருர்.

****

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

அன்புடையீர்!

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் 20—2—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, கோவை நகரையடுத்துள்ள பேரூர் துளுவ வேளாளர் அற நிலையத்தில் நடைபெறும்.

அதுபோது பொதுக் குழு உறுப்பினர்கள் அனை வரும் வருகை தந்து, நடவடிக்கைகளில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

ஆய்வுக்கு வருபவை:

1. நாடகத் தடைச் சட்டம்
2. மாநில மாநாடு

அன்பன்,

'அறிவகம்'
இராயபுரம், சென்னை-13
9—2—'55

சி. என். அண்ணுதுரை,
பொதுச்செயலாளர்

****

டாக்டர் ஜெகன் - கட்சித் தலைமை இழக்கிருர்!

பிரிட்டிஷ் கயானு விடுதலை இயக்கத்தில் மாறுதல்கள்

பிரி.கயானுவின் விடுதலைக்காகப் பாடுபடும் மக்கள் முன்னேற்றக் கட்சியின் முக்கியமான பதவிகளி லிருந்து டாக்டர் ஜெட்டி ஜெகன், அவரது மனைவி ஜேனட் ஜெகன் ஆகிய இருவரும் 'தீவிர இடது சாரிகளாயிருக்கின்றனர்' என்ற காரணத்திற்காக, விலக்கப்பட்டு விட்டனர் என்று தெரிகிறது.

சற்று மிதமான போக்குக் கொண்டவர்கள் இப்போதுதான் முதன் முறையாக, கட்சியின் நிர் வாகப் பொறுப்பிலிருப்பவர்கள் அதிதீவிரவாதிகளாயிருக்கக் கூடாது என்று கூறியிருக்கின்ற னர்.

கட்சியின் வருடாந்திர மாநாட் டில் கூடியிருந்த பெருந்திரளான ஜனக்கூட்டம், அந்த நிர்வாகத் தலைவர்கள் மீது ஏகமனதாக ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர் எனத் தெரி கிறது. அக்கட்சியின் அடுத்த பொதுச் சபைக் கூட்டம் வரை யில் கட்சியை நடத்திச் செல்ல இடைக்கால நிர்வாகக் குழு ஒன்று அமைக்கப்பட்டது என்றும் தெரிய வருகிறது.

புதிய நிர்வாக அமைப்பில் டாக்டர் ஜெகன் முதல் உதவித் தலைவராகவும், திருமதி ஜெகன் பொருளாளராகவும் நியமிக்கப்பட் டனர்.

பிரிட்டிஷாரால் கலைக்கப்பட்ட மந்திரிசபையில் சுகாதார, வீட்டு வசதி இலாகாக்களின் மந்திரியா யிருந்த டாக்டர் லட்மண் சிங் நிர் வாகக் குழுவின் தலைவராகியுள் ளார். இன்னுமொரு மந்திரியான ஜெய்நாராயண் சிங், செயலாளராக ஆகியுள்ளார்.

போலீஸ் குழுவை உழவர்கள் வளைத்துக் கொண்டனராம்

விளைவாக 20 உழவர்கள் கைது

தென்காசி, பிப். 15—

கடையநல்லூர் அருகில் ஏற்பட்டுள்ள அறுவடை தகராறில் 15 நபர்களைக் கைது செய்து கொண்டுவந்த போலீஸ் குழுவி னை, பல உழவர்கள் வளைத்துக்கொண்டு தாக்கினதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இரண்டு நிலச் சொந்தக்காரர்க ளிடமிருந்து, மொத்த அறுவடை யில் பாதி தங்களைச் சேர்ந்தது என உரிமை கொண்டாடி, அறு வடையான மூன்று வண்டி நெல் லையும் வைக்கோலையும் மறந்து எடுத்துக் கொண்டதாக உழவர் கள் மீது குற்றம் சாட்டப்படு கிறது. இத்தகவல் போலீசுக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம்

10,000 தொழிலாளர் முடிவு

இரு வாரங்களுக்குள் தங்களு டைய கோரிக்கைகளை அளிக்கா விட்டால், கல்கத்தாவிலுள்ள 10,000 டிராம்வே தொழிலாளர் களும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதென்று 3-தொழி லாளர் சங்கங்களின் கூட்டு ஆதர வில் நடைபெற்ற கூட்டமொன் றில் முடிவு செய்யப்பட்டது.

இதென்ன திட்டம்?

'சீட்டோ' என்றழைக்கப்படும் தென் கிழக்கு ஆசிய பாதுகாப்பு ஒப்பந்த வரம்புக்குள் சியாங் சர்க் காரின் பார்மோசாவைச் சேர்க்க வேண்டுமென, இந்திங்களில் பாங்காங்கில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் அமெரிக்காவும், பிலிப் பைன்சும் வற்புறுத்துமென்றும், இதை பாகிஸ்தான் எதிர்க்கலா மென்றும் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 16—2—1955 புதன்

சூதாட்டத்தில் வெற்றி!

பதினொரு திங்களுக்குப் பிறகு திரு—கொச்சியின் ஆட்சிப் பொறுப்பு மீண்டும் காங்கிரஸ் கட்சியிடம் மாறியிருக்கிறது. இதுதான் வெளிப்படையாகத் தெரிகிற உண்மையாகும்.

ஆனால், குறிப்பாகக் கூற வேண்டுமானால் பட்டம் தாணுப் பிள்ளையைத் தலைவராகக் கொண்ட ம. சோ. கட்சியின் மந்திரி சபையையும் ஒரு காங்கிரஸ் மந்திரி சபையாகவே தான் கொள்ள வேண்டும். அடிப்படை இலட்சியத்திலும் சரி, நடைமுறையிலும் சரி, காங்கிரஸ் பணித்தபடிதான் ம. சோ. கட்சி இந்தப் பதினொரு திங்களும் பேயாட்டம் ஆடி வந்திருக்கிறது.

எந்த ஒரு அரசியல் கட்சிக்கும், அது பதவியிலமர்வதற்கு முன் இருந்துவரும் செல்வாக்கின் அளவே, பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு அதற்கு இருப்பது கிடையாது. மக்களுக்கு நலம் செய்திருந்தாலும் தீமை புரிந்திருந்தாலும், பதவியிலேறுவதற்குமுன் ஒரு கட்சியிடம் தாங்கள் வைத்திருந்த நம்பிக்கை போலவே, பதவி காலம் முடிவுற்றதற்குப் பிறகு, அதே கட்சியிடம் மக்கள் நம்பிக்கை வைத்திருப்பதில்லை. ஒரு கட்சியின் ஆட்சிக் காலத்தில் கிடைக்கின்ற அனுபவம், அக்கட்சியைக் குறித்துத் துவக்கத்தில் தாங்கள் கொண்ட நம்பிக்கையை மாற்றிக் கொள்ள, மக்களுக்குத் துணை செய்கிறது.

பதவியிலேறுது தேர்தலில்தலையிடும்பொழுது ஒரு கட்சிக்குக் கிடைக்கும் ஆதரவு போன்றே, ஒரு முறை பதவியிலிருந்து விட்டு மீண்டும் தேர்தலில் கலந்துகொள்ளும் அதே கட்சிக்கு, மக்களின் ஆதரவு இருப்பதில்லை—குறைந்தே காணப்படும். இந்தச் செல்வாக்குச் சரிவிற்கு, மக்கள் பெறும் அநுபவ அறிவே மூல காரணமாகும்.

சென்ற பதினொரு திங்களாகப் பெயரளவில்தான் பட்டம் தாணுவின் ம. சோ. கட்சி திரு.—கொ. ஆட்சிப் பொறுப்பில் இருந்ததேயல்லாது, அக்கட்சியைப் பதவியிலமர்த்தத் தூண்டியதும், அமர்த்தியதும், ஆதரவு கொடுத்து நிலைக்க வைத்து வந்ததும் காங்கிரஸ் கட்சியேயாகும். காங்கிரஸ் கட்சி தனது ஆதரவை மீட்டுக்கொண்டதும், அந்தக் கட்சியின் ஆட்சி அடியற்ற மரமாகி விட்டது. எனவே, அன்றும் காங்கிரஸ் கட்சிதான் தி. கொ.-வை ஆண்டுவந்தது; இன்றும் அதே காங்கிரஸ் கட்சிதான் ஆள முன்வந்து இருக்கிறது எனக் கொள்வதே பொருத்தமுடையதாகும். ஆனால், இரண்டுக்கும் ஒரே ஒரு வேற்றுமை இருக்கிறது. அதாவது, ம. சோ. கட்சிப் போர்வையில் அன்றும், சொந்தப் பெயரில் இன்றும் காங்கிரஸ் கட்சி, தி. கொ.-வை ஆள முன்வந்திருப்பதுதான் அவ்வேற்றுமை!

திரு-கொச்சியை வெளிப்படையாக நாம் ஆள முடியவில்லையானாலும், நமது ஆதிக்கத்திற்குக் கேடு ஒன்றும் ஏற்படாத வகையில் மற்றொரு கட்சியை பதவியில் உட்கார வைக்க வேண்டும் என்பதுதான் காங்கிரசின் உள்ளெண்ணம். அவ்வுள்ளெண்ணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றக் கூடிய கட்சியாக ம. சோ. கட்சி இருப்பதை தி. கொ. காங்கிரஸ் கட்சியினர் கண்டறிந்து கொண்டனர். அதன்படி, அக்கட்சியிடம் தி. கொ. ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தனர்.

தங்கள்மீது, தி. கொ. த. நா. காங்கிரஸ் கட்சியினர், தமிழ்ப் பகுதி குறித்துக் கொண்டிருக்கின்ற ஆத்திரமும் காலஞ் செல்லச் செல்லத் தணியும், அப்பொழுது அவர்களை மறுமுறையும் ஒன்றாக அணைத்துக் கொண்டு மீண்டும் கொட்டு முழக்குடன் பதவியைக் கைப்பற்றி விடலாம் என்ற நினைப்புடன்தான், சென்ற பதினொரு திங்களுக்கு முன் ம. சோ. கட்சியைப் பதவியிலேற்றியது தி. கொ. காங்கிரஸ். இதுதான் தி. கொ. காங்கிரசின் அன்றைய உள்ளக்கிடக்கை என்பதை, பதவி பெற்றுள்ள தி. கொ. காங்கிரசின் இன்றைய போக்கு துளியும் ஐயத்திற்கு இடமின்றி உறுதி செய்வதாக இருக்கிறது.

இச்சதி நாடகத்தில் தி. கொ. காங்கிரஸ் நினைத்தபடியே வெற்றி பெற்றுவிட்டது. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினதுபோல, ம. சோ கட்சியின் கதி அதோகதியாயிற்று.

பதவி பறிபோனதால், பட்டம் தாணுவிற்குத் தனித்த முறையில் நஷ்டமுமில்லை; இலாபமுமில்லை. எதிர்பாரா வகையில் காங்கிரஸ் கட்சியின் தயவால் பதவி கிடைத்தது; அதே எதிர்பாரா வகையில் பதவி பறிக்கப்பட்டு விட்டது; இதில் நஷ்டமென்ன இருக்கிறது என பட்டம் இலாப நஷ்டக் கணக்குப் போடத்தான் செய்வார். அடிப்படைக் கொள்கையைப் பொறுத்தும் அவருக்கு நஷ்டம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. காரணம, அவருக்குப் பிடித்தமானதாக உள்ள கொள்கையென ஏதாவது ஒன்று இருந்தால் அல்லவோ, அது நஷ்டமாகிவிட்டதே என அவர் வருந்துவதற்கு?

சென்ற ஆகஸ்டு 11-ந் தேதியில், தி. கொ. தமிழர்களை நர வேட்டையாடியது ம. சோ. கட்சி ஆட்சியேயாகும். இருந்தாலும், அக்கொலையின், காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு உடையதே எனக்கொள்வது மிகையாகாது. கொடுஞ் செயலைக் கண்டிக்கும் வகையில், ம. சோ. கட்சிக்கு தான் அது வரை கொடுத்து வந்த ஆதரவை, உடனடியாக மீட்டுக் கொள்ள தி. கொ. காங்கிரஸ் கட்சி முன்வந்திருக்க வேண்டும். அப்படிச் செய்வதினால் தான், தமிழர்கள் மீது ம.சோ. கட்சி ஏவிய நாசத்திற்கும் தி. கொ. காங்கிரசிற்கும் எத்தகையத் தொடர்பும் கிடையாது என முடிவுகட்ட முடியும். ஆனால், தி. கொ. காங்கிரசோ அதைச் செய்யவில்லை.

தி. கொ. தமிழர்களை சுட்டுக் கொன்றதற்காக, ம. சோ. கட்சிக்குக் கொடுத்துவந்த ஆதரவை மீட்டுக்கொள்ள விரும்பவில்லையானாலும், அக்கட்சி புரிந்த கொடுமையைக் குறித்து இரண்டொரு காரசாரமான சொற்களால் தி. கொ. காங்கிரஸ் வெளிப்படையாகக் கண்டித்திருக்கலாம். இக் 'கண்துடைப்பு' வேலையைச் செய்யக்கூட தி—கொ காங்கிரஸ் கட்சிக்கு மனமில்லை.

ஆனால், தமிழர்களை நர வேட்டையாடிய ம. சோ. கட்சிக்கு பக்கபலமாக இருந்த அதே தி. கொ. காங்கிரஸ் கட்சியைப் பதவியிலுட்கார வைத்து ஆதரவு காட்ட தி. கொ. த. நா. காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் முன்வந்துள்ளனர். தங்கள் தலைவர்களின் இப்போக்கை தி. கொ. தமிழர்கள் எப்படி கருதுவர் — கருதுகின்றனர் என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

தி. கொ. தமிழ் மக்களின் கோரிக்கையை நியாயமானது என, ம. சோ. கட்சி தனது தேர்தல் அறிக்கையில் ஒப்புக் கொண்டிருந்த போதிலும், பதவியிலிருந்த காலத்தில் ஒப்புக்கொள்ள மறுத்ததைப் போலவேதான், தி. கொ. காங்கிரசும் ஒப்புக்கொள்ள மறுக்கிறது; ம. சோ. கட்சி தமிழர்களை சுட்டுக் கொன்றது— தி. கொ. காங்கிரஸ் அதைக் கண்டித்து கூறாது, பக்கத் துணையாக இருந்துவந்திருக்கிறது. எனவே, இரண்டு கட்சிகளும், தி. கொ. தமிழ் மக்களின் நீண்ட கால நியாயமான கோரிக்கைக்கு ஜன்ம வைரிகள் என்பது விளக்கமாகிறது.

தி. கொ. தமிழ் மக்களின் கோரிக்கையில் சாதகமானத் தெளிந்த முடிவு தி. கொ. காங்கிரஸ் கொண்டுவிட்டது; அந்த வகையில் காங்கிரஸ் இப்பொழுது மனமாற்றம் பெற்று இருக்கிறது என உறுதியாக நம்பத்தகும் வகையில் இது வரை ஒரு அறிகுறியும் தென்படவில்லை. இத்தகு சூழ்நிலையில், தி. கொ. த. நா. காங்கிரஸ் கட்சி, பதவியேறியுள்ள தி. கொ. காங்கிரசிற்கு ஆதரவு காட்டுவதில் முனைந்திருக்கிறது. தங்கள் தலைவர்களின் செயலை அங்குள்ள தமிழர்கள் எப்படி வரவேற்பார்களோ? நாம் அறியோம்!

எது எவ்வாறு இருந்தாலும், தி. கொ. காங்கிரஸ், தான் நடத்திவரும் அரசியல் சூதாட்டத்தில், இத்தருணத்தில் முதல் தரமான வெற்றி பெற்றிருக்கிறது என்பதில் மட்டும் ஐயமில்லை. பெற்றுள்ளது வெற்றிதான் - ஆனால்-அரசியல் நாணயம், நேர்மை, கண்ணியம்ஆகிய அனைத்தையும் பலியிட்டுதி.கொ. காங்கிரஸ் இவ்வெற்றியைப் பெற்றிருக்கிறது—பதவி வேட்டையே—உன் பெயர் காங்கிரஸ் 'ஆத்மார்த்த அரசியல்' போலும்!

இந்தியாவில் மொத்தம் 16 மாநிலங்களில் 350 பரீட்சார்த்தக் குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்கான இந்திய சர்க்கார் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

காங்கிரஸ் கூறும் 'சோஷலிச மாதிரி சமூகம்'

முற்போக்கு சக்திகளை சிதைவுறச் செய்யும் கண்துடைப்பு காரியம்

கர்நாடக திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

வீரர் உறவினருக்கு அனுதாபம்

திராவிட நாட்டுப் பிரிவினைக்கான அறப் போராட்டங்களில் கலந்து அரசியலாரின் அடக்கு முறைக்கு பலியான வீரர்களின் குடும்பத்தாருக்கு இம்மாநாடு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

—தலைவர்

★

ஏகாதிபத்தியத்தின் கண்துடைப்பு

சோஷலிசம் 'மாதிரி' ஒரு சமுதாயத்தை நிறுவுவது தான் காங்கிரசின் லட்சியம் என அண்மையில் நடைபெற்ற அனைத்திந்திய காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமானது தொழிலாளர் — நடுத்தர மக்களிடையே உருவாகி வரும் முற்போக்கு சக்தியினை சிதைவுறச் செய்ய வடநாட்டு ஏகாதிபத்தியம் செய்யும் கண்துடைப்புக் காரியம் என இம்மாநாடு பொதுமக்களுக்கு எடுத்துக் காட்டுகிறது.

—ஈ. வி. கே. சம்பத்
—க. அன்பழகன்

★

திராவிட குடியரசு கூட்டாட்சி

வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட கன்னடம், ஆந்திரம், கேரளம், தமிழகம் ஆகிய நான்கும் மொழி வழி மாநிலங்களாக அமையப் பெற்று இனவழி அடிப்படையில் ஒன்றுபட்ட திராவிட சுதந்திர சமதர்ம குடியரசு கூட்டாட்சி நிறுவ கன்னட மக்கள் தங்களின் பேராதரவைத் தருமாறு இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

—இரா. நெடுஞ்செழியன்
—மு. க. வேந்தன்

திட்டம் வஞ்சகமானது

நீர்ப்பாசனத் திட்டங்கள், மின்சார வசதிகள், தொழில் துறை வளர்ச்சி ஆகிய அனைத்திலும் வடநாடு வளரவும், தென்னாடு புறக்கணிக்கப்படவுமான நிலைமையில் ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தும், வகுத்துக் கொண்டுள்ள டெல்லி சர்க்காரின் போக்கினை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

—கே. ஏ. மதியழகன்
—காஞ்சீபுரம் பெருமாள்

★

கைத்தறிக்கு ஆதரவு

கைத்தறித் தொழிலுக்கும், அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பாட்டாளி மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் கைத்தறி ஜவுளிக்கு விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை ரத்து செய்யுமாறு மைசூர் ராஜ்ய அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—அ. பொன்னம்பலனார்
—சென்னை வி. ராமசாமி

★

தொழில் உறவு

தொழில் கோர்ட் நடவடிக்கைகள் கூடிய சீக்கிரம் தீர்க்கப்பட வேண்டுமென்ற விதியிருந்தும், ஆண்டுக் கணக்காக பல தொழில் தகராறுகள் நீடித்துக்கொண்டு போவதைக் கண்டு இம்மாநாடு வருந்துவதுடன், இனியாகிலும் அவற்றை ஆறு மாதங்கட்குள் முடிக்க அந்த விதியை மாற்றியமைக்க வேண்டுமென்று இந்திய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

—தலைவர்

சொல்லைக்கண்டு அஞ்சுகிறார்!

பீடார், பிப். 15—

"சோஷலிசம் மாதிரி ஒரு சமூகத்தை அமைக்க ஆவடி மாநாட்டில் காங்கிரசார் நிறைவேற்றிய தீர்மானம், பிரஜா-சோஷலிஸ்டு கட்சியின் எதிர்காலத்திற்கு விடப்பட்ட சவால் ஆகும்," என்று டாக்டர் ராம் மனோகர் லோகியா இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"பி.-சோ. கட்சி இப்போது காங்கிரசுடன் சேர்ந்து விடுவதா அல்லது கட்சியை தூய்மையாக்குவதா என்று தீர்மானிக்கவேண்டும்," என்று அவர் மேலும் கூறினார்.

"இதுபற்றித் தீர்மானிக்கப்பட வேண்டிய காலம் சீக்கிரமே வருகிறது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

பஞ்சமில்லை-ஆனால் ஒருவேளை உணவுதான்

பகல்பூர், பிப். 15—

பங்கா பகுதியில் விவசாயிகளிடையே உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. மாரிகாலப் பயிர் வீழ்ச்சியடைந்து விட்டதால் இப்போது உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதாம்.

இப்பகுதியில் வாழும் ஏழை விவசாயிகள் நாள் ஒன்றுக்கு ஒரு வேளை உணவுதான் உட்கொள்கிறார்களாம். இப்பகுதியில் எதிர்பார்த்தபடியின்றியில்லாது சுமார் 33 சத விகிதமே 'அகானி' தானியம் கிடைக்குமாம்.

நிலைமை இப்படியிருக்கையில், சில நாட்களாக ஏராளமான மழை பெய்துள்ளதாம். இதன் காரணமாக பூத்துக் குலுங்கிய மாமரங்களின் பூக்கள் கீழே கொட்டி விட்டதாம்.

அதுவும் அங்கேதான்!

பம்பாய்க்கு அருகில் ஒரு அணு சக்தி நிலயத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான 10 டன் 'கன நீர்' வினியோகம் செய்ய அமெரிக்கா ஒப்புதல் தந்துள்ளதாகத் தெரிகிறது. இந்தக் 'கன நீர்', அணுவைப் பிரிப்பதற்குத் தேவையான மாறுதல்களைச்செய்ய உபயோகிக்கப்படும் ஒன்றாகும்.

'கன நீரை'க் கொண்டு அமைக்கப்படும் கருவி, அணுசக்தி சம்பந்தமாக விஞ்ஞானிகளுக்குப் பயிற்சி தர மிகவும் உபயோகமானது என்று அமெரிக்க அணுசக்திக் குழுவின் அறிக்கை ஒன்றில் கூறப்படுகிறது.

அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்ற ஐசன்ஹோவரின் திட்டத்திற்கேற்பவே, இதை இந்தியாவுக்கு அனுப்ப அமெரிக்கா ஒப்புதல் தந்துள்ளதாம்.

2,000 ஏழைகளுக்கு நில விநியோகம்!

சேலம் மாவட்டத்திலுள்ள ஆத்தூர் தாலுகாவிலுள்ள 40,000 ஏக்கர் தரிசு நிலம் பூராவும் மார்ச் மாதத்திற்குள் நிலமில்லாத ஏழைகளுக்கு வினியோகிக்கப்பட்டுவிடுமென்றும், ஜனவரி மாதத்தில் மட்டும் 2,000 நிலமில்லாத ஏழைகளுக்கு 7,200 ஏக்கர் நிலம் வினியோகிக்கப்பட்டுள்ளதென்றும் சேலம் மாவட்ட கலெக்டர் திரு. பி. சபாநாயகம் அறிவித்துள்ளார்.

விவசாயக் கடன் மசோதா

கூட்டுத் தனிக் குழு பரிசீலிக்கும்

மசோதாவின் நோக்கம் குறித்து மந்திரி விளக்கம்

சென்னை, பிப். 14—

கூட்டுத் தனிக் குழு ஒன்றின் பரிசீலனைக்கு விவசாயக் கடன் வாய்தா மசோதாவை அனுப்ப வேண்டும் என்ற பிரரேபனை சட்ட சபையில் நிறைவேறியது.

தனிக் குழுவில், மந்திரிகள் மாணிக்கவேலர், சுப்பிரமணியம் உள்ளிட்ட 16 பேர் இடம்பெற்றுள்ளனர்.

கிராமக் கடன் வசதி பாதிக்கப்படுகிறது என்ற புகாருக்கு இடமின்றியும், அதே நேரத்தில் கடன் சுமையால் பாதிக்கப்பட்டு, நிவாரணத்திற்குரிய ஏழை விவசாயிகளுக்குக் கடனைத் தீர்க்கக் காலமளித்து வசதி செய்யும் வகையிலும் மசோதாவை சர்க்கார் கொண்டு வந்திருப்பதாயும், ரெவினியூ மந்திரி சபையில் தெரிவித்தார்.

சீட்டு நிதிகளுக்கு இந்த மசோதா வரம்பிலிருந்து விதிவிலக்களிக்கலாமென்ற கோரிக்கை நியாயமாகப்படுவதாயும் இதனை தனிக் குழுவில் பரிசீலனை செய்யலாமென்றும், மந்திரி அறிவித்திருக்கிறார்.

★

மசோதா பற்றிய விவரம்

சென்னை, பிப். 11—

விவசாயக் கடன் வாய்தா மசோதா சட்டம், இவ்வாண்டு மார்ச்சு திங்கள் முதல் நாளிலிருந்து இம்மாநிலத்தில் அமுல் நடத்தப்படும்.

சென்ற ஆண்டில், விவசாயிகளைக் கடன்காரர்களின் நிர்ப்பந்தத்தினின்றும் விடுவித்து, அவர்களுக்குத் தற்காலிக நிவாரணம் அளிக்க தற்காலிகச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இப்போது திருத்தப்பட்ட அச்சட்டம், இத்திங்கள் இறுதிவரை அமுலிலிருக்கும்.

சர்க்கார், இச்சட்டத்தின் வரையறைகளை மீண்டும் பரிசீலனை செய்து நல்ல நிலையில் உள்ள விவசாயிகளுக்கு இத்தகைய பாதுகாப்பு அவசியமில்லை என்றும், கடன்பட்டோர், தங்கள் கடன் தொகைகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் தவணைகளில் செலுத்திவிடவும், வீணாக அவர்கள் மீது தகராறுகள் ஏற்படுவதைத் தடுக்கவும் வேண்டியது அவசியம் என்று சர்க்கார் முடிவு செய்துள்ளது. இதை உத்தேசித்தே இந்தப் புதிய மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இப்புதிய சட்டத்தின்படி, கடன் கொடுத்தவர், வழக்குத் தொடருவதற்கு முன்னர் எழுத்து மூலம் தமது பணத்தைக் கேட்க வேண்டும். பணம் கேட்ட தேதி வரைக்குமுள்ள வட்டியையும், அசல் தொகையில் 8-ல் ஒரு பகுதியையும் கடன்பட்டவர் 3 மாதங்களுக்குள் கொடுத்திருப்பாரானால், கடன் கொடுத்தவர் தொடரும் வழக்கில் செலவுத் தொகை அனுமதிக்கப்படமாட்டாது.

இச்சட்டத்தினால், 1953 அக்டோபர் 1-ந் தேதிக்கு முன்னர் விவசாயியாக இல்லாதவருக்கும், அதற்கு முன்னர் நிலம் வைத்திருக்காதவர்களுக்கும் அனுகூலமில்லை.

இச்சட்டத்தினால் அனுகூலமடையும் சிறு சிறு விவசாயிகள், சட்ட ஆரம்பத் தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் கடன் மீதுள்ள வட்டியையும், அசல் கடன் தொகையில் 8-ல் ஒரு பாகமும் செலுத்திவிட வேண்டும். பின்னர் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் திங்கள் முதல் தேதிக்குள் பாக்கியிருக்கும் அசலில் 8-ல் ஒரு பாகத்தையும், அன்றைய நாள் வரையுள்ள பாக்கி வட்டியையும் செலுத்திவிட வேண்டும்.

கடனை வசூலிக்க பிராது செய்பவர், இச்சட்டம் அமுலுக்கு வந்த 3 மாதங்களுக்குள் 'நோட்டீஸ்' கொடுத்து பணத்தைக் கேட்க வேண்டும்;

'நோட்டீஸ்' அனுப்பாமல் அவர் பிராது செய்தாலோ, அல்லது 3 மாதங்களுக்குள் கடன் பட்டவர், வட்டியையும், அசலின் 8-ல் ஒரு பகுதியையும் செலுத்தி விட்டாலோ, பிராது செய்து கொண்டவருக்கு கோர்ட் செலவுத் தொகை அனுமதிக்கப்படமாட்டாது. அதோடு, விவசாயிக்கான செலவையும் பிராது செய்து கொண்டவரே செலுத்த வேண்டியிருக்கும்.

விவசாயி தவணைப் பணத்தைக் கோர்ட்டில் கட்டிவிட உரிமையுண்டு அத்தகைய பணம் கட்டுபவர் 'விவசாயி அல்ல' என்னும் காரணத்தாலோ, அல்லது அத்தொகை 'கடன் தொகை'யாக இல்லாமலிருந்தாலோ, அல்லது பணம் பற்றாக்குறையாக இருந்தாலோ, கடன்பட்டவரின் விண்ணப்பத்தை கோர்ட் நிராகரித்துவிட அதிகாரம் உண்டு; கோர்ட்டின் தீர்ப்புமீது 'அப்பீல்' செய்து கொள்ளவும். உரிமை உண்டு.

தேனீர் விருந்தில் கம்யூனிஸ்டுகள் கல் வீசினராம்!

விஜயவாடா, பிப். 14—

இங்கு நகரசபை உறுப்பினர் ஒருவர் வீட்டில் காங்கிரஸ் தோழர்கள் தேநீர் விருந்தில் மகிழ்ந்திருந்தார்களாம்!

அச்சமயத்தில் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தோர் பலர் கற்களை வீசினார்களாம்! பின்னர் போலீசார் வருவதைக் கண்டதும் அவர்கள் ஓடிவிட்டனராம்.

ஐதராபாக்திலிருந்து தேர்தலுக்காக வந்திருக்கிற காங்கிரஸ் ஊழியர்களைப் பாராட்டவே இந்த விருந்து நடைபெற்றதாம்!

"அறிவுக் கோட்டையின் கதவுகள் மெல்ல மெல்லத்திறக்கப்படுகிறது; அந்த அளவுக்கு, இடிந்து கொண்டிருக்கும் பழைமையின் கோட்டைக் கதவுகள் மூடப்படுகின்றது."

"எதிரிகளால், சர்க்காரால், மதவாதிகளால் ஏற்படுகிற எல்லாவிதத் துன்பங்களையும் நாம் ஏற்றுக்கொண்டு, சமுதாயத்தைத் தூய்மையாக்குகிறோம்; இதில் கேலிக்கு இடமில்லை," என்று கூறி, பெங்களூரில் நடைபெற்ற கர்நாடக தி. மு. கழக முதலாவது சமூக சீர்திருத்த மாநாட்டில் அனைவரையும் வரவேற்றுப் பேசிய தோழர்

எஸ். வி. பதி

குருதியை ஈந்து இறுதியைச் சந்திக்கவும் உறுதி பெற்றவரே கன்னடியர்!

பெங்களூர் மாநாட்டில் எஸ். ஜே. உசேன்

★

13—2—55-ல், பெங்களூரில் நடைபெற்ற கர்நாடக தி. மு. கழக அரசியல் மாநாட்டில், அனைவரையும் வரவேற்று தோழர் எஸ். ஜே. உசேன் பேசியதின் முதற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; பிற்பகுதி இங்கு தரப்படுகிறது:—

பெங்களூரில் பெரும்பாலும் தமிழர்கள்தான் அரசியல் இயக்கங்களைச் சார்ந்திருக்கிறார்கள் என்றும், கன்னடியர்கள் தமிழர்களிடம் எச்சரிக்கையோடு இருந்தொழுகவேண்டும் என்றும், நமது சமஸ்தான சர்க்காரின் பொறுப்பான அதிகாரி ஒருவர் அண்மையில் கூறினார்.

நான் நமது கன்னடத் தோழர்களுக்கு கூறஆசைப்படுகிறேன்—திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் நீங்கள் ஒன்றும் தவறாகப் புரிந்து கொள்ளவேண்டாம்; இந்திய உபகண்டத்தில் உள்ள மற்ற யாரையும்விட நாங்கள்தான் உங்களின் உண்மையான சகாக்களாவோம்; தமிழகம் நமது இடது கண் என்றால், கன்னடம் நமது வலது கண் போன்றதாகும். 'கன்னட நாடு கன்னடருக்காக வேண்டும்; கன்னடத்தை பிணைத்திருக்கும் டில்லியின் அரசியல், பொருளாதார பிடிப்புகள் துண்டிக்கப்பட வேண்டும்; கன்னடத்தின் முன்னேற்றத்திற்கான எல்லா வழிவகைகளும் செய்யும் உரிமையினை நாம் பெற்றாகவேண்டும்; திராவிட முன்னேற்றக் கழகம் அதற்காகப் பாடுபடும்; மொழிவழி பிரிக்கப்பட்ட கன்னட மாநிலம், இனவழி திராவிட கூட்டாட்சி இணைப்புக்காக, கர்நாடக திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தும்: இதுதான் நமது அடிப்படை இலட்சியமே தவிர, கன்னடத்தை யாருக்கும் காட்டிக்கொடுத்துவிடமாட்டோம்; எனவே, கன்னட மெய்யன்பர்களே, தமிழர்களைப் பற்றி நீங்கள் அஞ்ச வேண்டாம்: நமது கொள்கையைப் பற்றிய விளக்கம் தேவையென்றால் நம்மை நேரில் சந்தித்துப் பேசி தெளிவு கொள்ளுங்கள்: அதற்காக பண்டார சன்னதிகளை நோக்கிப் போகாதீர்கள்; தி. மு. கழகத்தின் உண்மையான உருவம் அங்கே ஆத்மீகத் திரை கொண்டு மறைக்கப்பட்டுவிடும்.

கன்னடத் தோழர்கள் நம்மை ஆதரிக்கவில்லை யென்றால், அவர்கள் எதிர்க்கவுமில்லை என்பதை உணர வேண்டுகின்றேன். அவர்களுக்கு இன்னமும் நமது கொள்கைகள் கூறப்படவில்லை—அதற்கான சாதனங்கள் நம்மிடமில்லை; நமது உண்மையான நோக்கங்கள் கன்னடியர்களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டால், கர்நாடக திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் வரிசையிலே அவர்கள்தான் நிற்கப் போகிறார்கள் என்பதில் நமக்கு ஐயமில்லை.

உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன்—1952-ம் ஆண்டில், ரயில் நிலையத்தில் உள்ள இந்தி பெயர் அழிப்புப் போராட்டத்திற்கு நமது படை புறப்பட்டுச் சென்றபோது சில கன்னடிய நண்பர்கள்—ஒரு போலீஸ் அதிகாரி உட்பட, 'ஏன் இந்தியை அழிக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள்; 'அந்தாபாருங்கள்—இந்தியின் தாளடியிலே நமது தாய்மொழியாம் கன்னடம் கேலி செய்யப்படுவதை,' என்று சுட்டிக் காட்டினோம்.

"Down with Hindi" என்று அவர்களும் நம்மோடு கூவினார்கள்; நமது அறப்போர் அமோகமான வெற்றியுடன் நடந்தது; இந்த உதாரணம் ஒன்றே போதும்—கன்னடியர்கள் நம்மை ஆதரிக்கிறார்களா. இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள!

இப்படியே நமது ஒவ்வொரு கொள்கைகளும் அவர்கள் புரிந்து கொள்ளும் விதத்திலே எடுத்துக் கூறப்பட்டால், அடுத்த கர்நாடக திராவிட முன்னேற்றக் கழக இரண்டாவது மாநாட்டிற்கு வரவேற்புக் குழுத் தலைவராக நான் இருக்கமாட்டேன்; என் தமிழ் நண்பர்களும் இருக்கமாட்டார்கள்; கன்னடியத் தோழர்களே அதைச் செய்வார்கள் என்றுதான் கூறுகிறேன்; அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை.

இங்கே கன்னடியரும், சென்னையிலே தமிழர்களும் வடநாட்டுச் சுரண்டலால் தாக்கப்படுகின்றார்கள் என்றால், கன்னடியன், பக்கத்தில் கூச்சலிடும் தமிழனை திரும்பிப் பார்க்காமலா இருப்பான்? இருவருக்குமிடையே ஒரு கூட்டுறவு ஏற்பட்டுவிட்டால் அழிக்கும் அந்த ஆதிக்கக்காரனின் சதிதான் என்னவாகும்? இந்த மாநாடு, அந்த எதிர்காலத்தைத்தான் முன்கூட்டியே எச்சரிக்கை செய்கிறது.

நான், நமது அன்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்—நமது தாயகத்தின் மீட்சிக்கான வகையிலே கோரப்படும் எல்லாவிதமான தியாகங்களையும் தருவதற்குக் கன்னடம் எப்போதும் காத்திருக்கிறது. இந்தச் சமுதாயத்தை மூடி நிற்கும் மாசுகளைத் துடைக்கும் சக்தி எங்கள் இரத்தத்திற்குத்தான் உண்டென்றால், தயங்காமல் அதனைத் தருவதற்கு உறுதியுடனிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

நாம், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று சொன்னபோது, 'எலி வளை எலிகளுக்கே' என்று ஏளனம் செய்தனர்; இது, எசமானர் தயவில் வாழுகின்ற கூட்டம்.

தொடர்ந்து, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்றோம்; 'அது தகாது; தரணி எல்லாம் பொதுவுடமை உண்டாகிவிட்டால் போதும்; சமூக ஏற்றத்தாழ்வுகள் தானே சரிப்பட்டுவிடும்,' என்றனர் மற்றும் சிலர்; இவர்கள், சொந்தமாகச் சிந்திக்கத் தெரியாத வகையறாவைச் சேர்ந்தவர்கள்.

'திராவிட நாடு' குதிரைக் கொம்புதான் என்று ஏளனம் பேசியவர்களும் இவர்களேதான்: இன்றல்ல—அன்று! இப்போது, 'திராவிட நாடு கிடைத்துவிடும்: தி. மு. கழகம் அதைப் பெற்றுவிடும்,' என்று தெரிந்ததும், 'உங்களை ஆந்திரம் ஆதரிக்கிறதா? கன்னடம் கேட்கிறதா? என்பன போன்ற வினாக்களை நம் முன்னே நீட்டி வருகிறார்கள்; 'கன்னடம் கேட்கிறதா,என்று கூறினோர் கன்னத்திலே, 'பளார்' என்று அறைந்து, 'இதோ பார், கன்னடம் கேட்பதை,' என்று அறிவுறுத்தும் வகையிலே இந்த மாநாடு அமைந்திருக்கிறது: எனவே, நான், நமது தலைவர்களுக்குக் கூற ஆசைப்படுகிறேன்— தமிழகத்திலிருந்து வந்திருக்கும் நமது தோழர்களுக்கும் கூறுகிறேன்—இந்த மாநாட்டை முடித்துக்கொண்டு தமிழகம் செல்லுங்கள்: அங்கே, 'கன்னடம் கேட்கிறதா?' என்று சிவஞானம் கேட்டால், ஜீவானந்தம் வினவினால், கன்னடம் கேட்கத் தொடங்கிவிட்டதாக அவர்களுக்குச் சொல்லுங்கள்.

சமுதாயத்தில் காணப்படும் சீரழிவுகள் களையப்பட வேண்டுமென்பது நமது முதற் குறிக்கோள்; அரசியலிலே, பொருளியலிலே, திராவிடம், வடநாட்டுச் சுரண்டலினின்றும் விடுதலை பெற்று வாழவேண்டும் என்பது நமது மூல மந்திரம்; சுதந்திரத் திராவிடத்தை பொதுவுடைமைப் பூங்காவாக அமைக்க வேண்டும் என்பது நமது இலட்சிய இறுதி; அதற்கான, திட்டங்கள் தீட்டுவோம்—வெஞ்சமர் வீரர்களே, வருக! வருக! என்று அழைக்கின்றேன்!

வளமார் திராவிடத்தின் செல்வமெல்லாம் வடநாட்டுக்குக் கொள்ளைப் போகிறது; நாம் வறியர்களாக, வயிற்றுக்குக் கஞ்சியற்றவர்களாக வாழ்கிறோம்; மார்வாடிகளும், மூல்தானிகளும் திராவிடத்தின் வளப்பத்திலே கொழுத்து வாழ்கிறார்கள்; பெங்களூரில், அன்று வெள்ளையர்கள் வாழ்ந்திருந்த பகுதிகளை எல்லாம் இன்று வடநாட்டு சேட்டுகள் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்; அன்று அவர்களுக்கு அடிமையாக இருந்தோம் — இன்று, இவர்களுக்கு அடிமையாக இருக்கின்றோம்; இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு, இதைத் தவிர, திராவிடர்கள் வாழ்விலே என்ன மாற்றத்தைக் கண்டோம்—யாராவது கூறமுடியுமா? அந்த மாற்றத்திற்கான ஒரே வழி, திராவிட நாடு, திராவிடருக்கு ஆக வேண்டியதுதான்; அந்த அருமையான திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருக்கிறது; திராவிடர்களே! அணி அணியாகத் திரண்டு வாரீர்!—என்று அனைவரையும் அழைக்கின்றேன்."

தங்கம் கேட்கும் மணம்!

இந்தியா முழுமையிலும் ஆண்டொன்றுக்கு 20 லட்சம் திருமணங்கள் நடைபெறுகின்றனவாம்!

இத்திருமணங்களுக்காக மட்டும் ரூ. 150 கோடி பெறுமானமுள்ள தங்கமும், வெள்ளியும் நகைகளாகவும், அணிகலன்களாகவும் மாற்றப்படுகின்றனவாம்!

சராசரியாக ஒரு மணமகளுக்கு ரூ 100 பெறுமானமுள்ள தங்கம், வெள்ளி நகைகள் செய்தாலும், ஆண்டொன்றிற்கு ரூ. 20 கோடி பெறுமான தங்கம், வெள்ளி நகைகள் தேவைப்படுகிறதாம்!

இந்தியாவிலுள்ள மொத்தம் 5 - கோடி பெண்களுக்கும் திருமணம் செய்துவைக்க வேண்டுமானால் ஆண்டொன்றுக்கு ரூ. 125 கோடி தேவையாக இருக்கிறதாம்!

இந்தத் திருமணங்களையொட்டி ஆண்டுதோறும் ரூ. 600 கோடிக்கு லேவாதேவி நடைபெறுகிறதாம்!

இதனால் 2 இலட்சம் பொற்கொல்லர்கள் தங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்துகின்றனராம்!

இந்திய தங்க வியாபாரிகள் மாநாட்டில் இவ்விவரம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தியாவில் ஆண்டுதோறும் ரூ. 100 கோடி பெறுமான பருத்தியும், ரூ. 100 - கோடிக்கு எண்ணெய் வித்துக்களும், ரூ. 300 கோடிக்கு உணவுப் பொருள்களும் தயாராகின்றனவாம்.

சென்னை சட்டசபையில்....

★

கடலை எண்ணெய் ஏற்றுமதி 'கோட்டா'

சென்னை மாநிலத்திலிருந்து கடலை எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்கான கோட்டா அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டதென்றும், சென்னையில் தற்போது உபரியாக எண்ணெய் வித்துக்கள் இருந்து வருவதால் மாநில உபயோகத்துக்காக கோட்டா எதுவும் நிர்ணயிக்கப்படவில்லையென்றும் சென்னை சட்ட சபையில் விவசாய அமைச்சர் பக்தவத்சலம் தகவல் தெரிவித்திருக்கிறார்.

கடலை எண்ணெய், பிண்ணாக்கு ஏற்றுமதி பற்றிய விஷயங்கள் யாவும் மத்திய அரசாங்கத்தின் கையில்தானுள்ளது என்றும் அவர், கேள்வி ஒன்றிற்குப் பதிலளித்திருக்கிறார்.

சட்டசபை கேள்வி நேரத்தின் போது, எதிர்க்கட்சி துணைத்தலைவர் எம். கல்யாணசுந்தரம், கடலை எண்ணெய் ஏற்றுமதிக்கு 3 வெள்ளைக்காரர் 'கம்பெனி'களுக்குத்தான் அனுமதி தரப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி; 'நேரிடையாகக் கோட்டா உரிமை பெற்றவர்கள் சர்க்கார் மூலம் ஏற்றுமதி செய்து, வியாபாரத் தொடர்பு வைத்துக் கொள்ள சர்க்கார் உதவுமா?' என்று கேட்டார்.

அதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர், 'இது பற்றி இனிமேல் தான் யோசிக்கப்படும்,' என்று கூறினார்.

மேலும் அவர், சர்க்காரின் ஏற்றுமதிக் கொள்கை குடியானவர்களுக்கும் தெரியும்படி செய்ய சர்க்கார் கவனிக்கும் என்றும், என்றாலும், ஏற்றுமதி விஷயங்களில் சர்க்காரின் கொள்கை அவ்வப்போது மாற்றப்படத்தான் வேண்டுமென்றும் கூறினார்.

தங்கக் கனிப் பொருட்கள்:

தென் மலபாரிலுள்ள எர்ணாடு தாலூகாவைச் சேர்ந்த பரக்கன்னு எனுமிடத்தில் தங்கக் கனிப் பொருட்களை எடுப்பது குறித்து மத்திய சர்க்கார் பூகோள இலாகாவினர் தம் ஆராய்ச்சிகளை இவ்வாண்டில் ஆரம்பிப்பர் என்று அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

★

குடும்பக் கட்டுப்பாடு யோசனை நிலையங்கள்:

மேக நோய் சிகிச்சை நிலையம் ஒன்றை சென்னை இராயப்பேட்டை சர்க்கார் மருத்துவ மனையில் ஏற்படுத்தவும், மாநில முழுமையிலும் 8 மருத்துவ மனைகளில், குடும்பக் கட்டுப்பாடு யோசனை அளிக்கும் நிலையங்கள் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

'சுகாதார அமைச்சர், குடும்பக் கட்டுப்பாடு யோசனைகளைத் தெரிந்து வைத்திருக்கிறாரா?' என்று சட்டசபை உறுப்பினர் ஒருவர் கேட்டதற்கு, அமைச்சர், 'எழும்பூர் பெண்கள் பிரசவ விடுதியிலிருந்து வேண்டுமானால் உறுப்பினர் யோசனை பெற்றுக் கொள்ளலாமே!' என்று கூறினாராம்!

★

முனிசிப்புகள் வேலைக்கு வழக்கறிஞர்கள் மனு!

கடந்த ஆண்டில் (1954) மாவட்ட முனிசிப்புகள் நியமனம் நடைபெற்றது என்றும், மாவட்ட முனிசிப் நியமனங்களுக்கு மொத்தம் 246 வழக்கறிஞர்கள் மனுச் செய்து கொண்டனர் என்றும், அவர்களுள் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரை நீக்கி 70 பேர் பிற்பட்ட வகுப்பினர் என்றும் சட்டசபையில் நிதி அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இந்த நியமனத்தில் மொழிவாரி பிரதேச பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டதென்று அவர் கூறினார்.

★

போலீஸ் அதிகாரிகள்மீது ஒழுங்கு நடவடிக்கை!

மாநிலத்தில் கடந்த 1953—54-ம் ஆண்டில் மொத்தம் 7,362 போலீஸ் அதிகாரிகள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதென்று சட்டசபையில் அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார். இவ்வாறு தொடரப்பட்டுள்ள வழக்குகளில் இன்னும் 126 வழக்குகள் பைசல் செய்யப்படவில்லை என்றும் கூறினர்.

மாதர்நல அபிவிருத்தி நிறுவனங்கள் பற்றி......!

மாநிலத்திலுள்ள மாதர் நல அபிவிருத்தி நிறுவனங்களில் மொத்தம் 17 அரிசன வகுப்பினர் இருப்பதாகவும், இந்த நிறுவனங்கள் யாவும், மத்திய சர்க்காரின் மானிய உதவி எதுவுமில்லாமல் சென்னை சர்க்காரின் செலவிலேயே இயங்கி வருவதாகவும், விவசாய அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

சபை உறுப்பினர் ஒருவர், 'மாதர் முன்னேற்ற சங்கங்களில் பணியாற்றுவோரெல்லாம் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்கிறார்களல்லவா?' என்று கேட்டார். அதற்குப் பதிலளிக்கையில் அமைச்சர், ஆபீசர்கள் (உயர் அதிகாரிகள்), ஊழியர்கள் ஆகிய எல்லோருமே அம்மாதிரியான குடும்பங்களிலிருந்து தான் வந்தவர்கள் என்று கூறிவிட முடியாதென்றும், உத்தியோகப் பற்றற்ற சிலர், அம்மாதிரியான பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும் கூறினர்.

தென்னாட்டில்.....

பைகாரா திட்டம்:

"சர்க்கார், மின்சார, நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் தருகிறது; ரூ. 50 கோடி செலவில் பைகாரா திட்டத்தை விரிவாக்கும் திட்டமொன்றை ஆரம்பிக்கப் போகிறது; இத்திட்டங்கள் யாவும் மாநிலத்தின் சுபீட்சத்தை முன்னிட்டே நிறைவேற்றப்படுகின்றன,"

என்று, சென்னை முதலமைச்சர் காமராசர், சாத்தூர் தாலுகாவில் தேர்தல் பிரசாரம் செய்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

வைகை திட்டம்:

"வைகை திட்டத்தால் 10 அல்லது 13 கிராமங்கள் அழிந்து விடும் என்று கருதப்படுவது சாதாரணமானதுதான்; அக்கிராமத்தவர்களனைவருக்கும் நஷ்டஈடாகப் புது நிலங்கள் கட்டாயமாகக் கொடுக்கப்படும்,"

என்று முதலமைச்சர் காமராசர், பிரமலை கள்ளர் பொது நிதி நிர்வாகக் குழுவினர், தேனியில் தமக்களித்த வரவேற்பு, மகஜர்களுக்குப் பதில் கூறுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர், பவானி நீர்த்தேக்கம் கட்டும்போது கூட, இதே பயம் அங்கிருந்த மக்கள் மனதிலும் குடிபுகுந்திருந்தது என்றும் அவர்களுக்கெல்லாம் வேறு நல்ல நிலங்கள் கொடுத்த பின்னர் அவர்கள் இப்போது மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் என்றும், அதுபோலவே இங்கும் இத்திட்டத்தினால் பாதிக்கப்படுவோர், எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமில்லாமல் நிலம் வழங்கப் பெறுவரென்றும் குறிப்பிட்டார்.

★

பெண்ணையாறு பாலம்:

"நாட்டில் உற்பத்தி மட்டும் பெருகிவிட்டால் போதாது. நாடு முன்னேற வேண்டுமானால் அந்த உற்பத்திப் பொருட்கள் விரிவாக விநியோகிக்கப்பட தேவையான வசதிகளிலொன்றான போக்குவரத்தும் பெருக வேண்டும்; இவ்வளவு அதிகமான தொகையில் நாம் கட்டவிருக்கும் இந்தப் பாலம், தென்னாட்டில், போக்குவரத்துக்கு மிக மிக வசதியான ஒன்றாக இருக்குமென நம்புகிறேன்; ஆயினும், மக்களின் பூரண ஒத்துழைப்புதான் எதற்கும் தேவை."

இவ்வாறு, சென்னை—திண்டுக்கல் பெரிய சாலையில் விழுப்புரத்திற்கருகில் பெண்ணையாற்றின் குறுக்கே கட்டப்படும் பாலத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டுகையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

கோவையில் தி. மு. க. பொதுக் கூட்டம்

20-2-55 மாலை **6** மணிக்கு, கோவை, சிதம்பரம் பூங்காவில், தி. மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் சம்பத், நெடுஞ்செழியன், மதியழகன், என். வி. நடராசன், கருணாநிதி, ஆசைத்தம்பி, எம். எஸ். இராமசாமி, தங்கப்பழம், அன்பில் தருமலிங்கம், மதுரை முத்து, அப்பாவு, ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ., பொன்னம்பலனார், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, தில்லை வில்லாளன், சி. பி. சிற்றரசு, கண்ணதாசன், அரங்கண்ணல், இளம்வழுதி, இளங்கோ, தோழியர்கள் அருண்மொழி, சத்தியவாணிமுத்து, மற்றும் பலர் பேசுவர்.

20-2-55 காலை 7 மணிக்கு, கோவை இரயில் நிலையத்தில் தலைவர்களுக்கு வரவேற்பு ஊர்வலம் நடைபெறும்.

கோவை நகர தி. மு. க. சிறப்புக் கூட்டம்

19-2-55 மாலை 6½ மணிக்கு, கோவை, வைசியாள் வீதி, குமரவேல் ரைஸ் மில் (தர்மராஜா கோவில் அருகில்) கோவை நகர தி. மு. கழகச் சிறப்புக் கூட்டம் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர் ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசுவர்.

நன்கோடை அணா 4

வேண்டுகோள்

19, 20-2-55 தேதிகளில் கோவை மாவட்ட பேரூரில் நடைபெறும் தி. மு. கழகப் பொதுக் குழுக் கூட்டத்திற்கு வருகிற வெளியூரில் பஞ்சாலைத் தொழிலாளருடன் சம்மந்தப்பட்ட தோழர்கள், நிர்வாகத் தோழர் இரா. சுந்தரத்தை சந்திக்குமாறு, 'திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் கழக' அமைப்புக் குழு கேட்டுக்கொள்ளுகிறது.

திருமண அழைப்பு

★

"என் இரண்டாவது மகள் திருமதி. எஸ். துர்காவிற்கும், சென்னை திரு. கே. வாசுதேவன் அவர்கட்கும், **18-2-55** வெள்ளிக்கிழமை காலை **9** மணிக்கு, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தலைமையில், சென்னை, வைதிநாத முதலி தெரு, **35**-ம் எண்ணுள்ள இல்லத்தில் திருமணம் நடைபெறும். அது சமயம் நண்பர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவார்கள். தாங்கள் வருகை தந்து விழாவினை சிறப்பிக்கக் கோருகிறேன்," என்று, போளூர்-சுப்பிரமணியம் அவர்கள் வேண்டிக்கொள்ளுகிறார்.

அரிசகிரியில் தி. மு. க. திறப்பு விழா

பெங்களூர் மாநாடு தேடித்தந்த வெற்றியின் பயனாக, பெங்களூருக்கு 15 மைலுக்கப்பால் பூனா மார்க்கத்திலுள்ள அரிசகிரி என்ற ஊரில் **16—2—55** அன்று, தி. மு. கழகத் திறப்பு விழா நடைபெறும். கழகத்தைத் துவக்கிவைக்க தோழர்கள் சி.பி. சிற்றரசு, எஸ். ஜே. உசேன் ஆகியோர் செல்கின்றனர்.

கழகக் கூட்டங்கள்

★

வேலநத்தம்

தி. மு. கழக 5-வது ஆண்டு விழா

ஞானானந்த ஆஸ்ரமத்தின் முன்னிலையில்

18—2—55 மாலை **6** மணிக்கு

தலைவர்: ஈ. ஆர். கிருஷ்ணன்

பேசுபவர்:

என். வி. நடராசன்

★

குன்னத்தூர்

தேர்முட்டித் திடலில்

18—2—55 மாலை **7** மணிக்கு

தலைவர்: என். டி. இராமசாமி

பேசுவோர்:

சத்தியவாணிமுத்து

ச. அன்பரசு

கே. என். நடராசன்

தமிழ் நூல் பரிசளிப்பு விழா

18—2—55 மாலை 6 மணிக்கு. தமிழ் வளர்ச்சிக் கழகச் சார்பில், ஏழாவது தமிழ் நூல் பரிசளிப்பு விழா சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெறும். டாக்டர் இராம. அளகப்ப செட்டியார் விழாவிற்குத் தலைமை தாங்குவார்; முதலமைச்சர் திரு. கே. காமராச நாடார் பரிசுகள் வழங்குவார்; பிரமுகர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

பரமக்குடி தி. மு. கழக உறுப்பினர்கட்கு

18—2—55 இரவு 10 மணிக்கு. பரமக்குடி தி. மு. கழகக் கட்டிடத்தில், தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அதுபோது கழக வரவு-செலவு கணக்குகளைக் குறித்தும், பொது உறுப்பினர்களைக் குறித்தும், மற்றும் கழக சம்மந்தமான இதர விஷயங்களைப் பற்றியும் ஆலோசிக்கப்படும்.

'அறிவாளி'களிடையே அசுத்தம்!

கயை நகரம், மிகவும் அசுத்தமான நகரமாம்! அசுத்தத்தை ஒழிக்க அங்குள்ள 'அறிவாளி'கள் என்போர் ஒன்றும் செய்யவில்லையாம்! இதைக் கண்டு மனம் சகிக்காத எழுத்தறிவில்லாத ஏழைகள், 'முட்டாள்கள் சங்கம்' ஒன்றை ஏற்படுத்தி, நகரைச் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனராம்!

"அறிவாளியாகப் பாசாங்கு செய்வதுதான் உலக இன்னல்களுக்கெல்லாம் மூல காரணம்; அறிவாளிகள், அந்தரங்க சுத்தியுடன் பணியாற்றும் பெரிய ஆட்களல்ல; அந்த அறிவாளிகள்தான் கயை நகரை அசுத்தமானதாக்கிவிட்டார்கள்," என்று அச்சங்கத் தலைவர் கூறினாராம்!

முஸ்லிம் அறநிலையங்கள்

சென்னை சர்க்கார் நடவடிக்கை

சென்னை மாநிலத்தில், முஸ்லிம் அற நிலையங்கள்மீது கட்டுப்பாட்டையும், மேலதிகாரத்தையும் மாநில சர்க்கார் மேற்கொண்டுவிட்டது. இந்நடவடிக்கையின் மூலம், இந்து அற நிலையங்களுக்குச் சமமாக அவை வந்துவிட்டன; இந்து அற நிலையங்கள் பல ஆண்டுகளாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ளன.

தனுஷ்கோடி மறைந்துவிடும்?

கடல் முன்னேறுவதால் விளையும் விபரீதம்

இப்போது இருந்து வரும் நிலை இப்படியே நீடித்துக் கொண்டே போனால், இன்னும் 3 ஆண்டுகளுக்குள் தனுஷ்கோடி கடலுக்குள் ஆழ்ந்து விடுமென்றும், 1958-க்குள் இந்தியாவிலிருந்து இலங்கை செல்வதற்கு மற்றொரு முனையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும், நிபுணர்கள் ஆராய்ந்து கண்டறிந்து, சர்க்காரை எச்சரித்துள்ளனர்.

தனுஷ்கோடி, இந்தியாவையும்—இலங்கையையும் இணைக்கும் ஒரு இடமாக அமைந்துள்ளது.

கடந்த 40 ஆண்டுகளில் கடல், சுமார் 5 மைல் நில பாகத்தை தண்ணீரில் ஆழ்த்திற்று; மருத்துவ மனையொன்றை இருந்தஇடம்தெரியாமல் தண்ணீரில் ஆழ்த்தியது கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் ஒரு பர்லாங் தூரத்திற்குக் கடல் கரைநோக்கி முன்னேறிவிட்டது. இப்போது தனுஷ்கோடி இரயில் நிலயத்திற்கும், கடல் கரைக்கும் இரண்டு பர்லாங் தூரம்தான் உண்டு.

கடந்த 10 ஆண்டுகளில் சுங்க இலாகாவைச் சேர்ந்த சிப்பந்திகளின் வீடுகளையும் மூழ்கடித்தது. மீன் பிடிப்போரும் தங்கள் தங்கள் குடிசைகளை இப்போது தள்ளி அமைத்துக் கொண்டே வருகின்றனர்.

தனுஷ்கோடிக்கு, பிரயாணிகளின் மூலமாக ரெவினியூ வரவாக ஆண்டொன்றுக்கு 1½ லட்ச ரூபாயும், கப்பல் போக்குவரத்து மூலமாக 4 லட்சம் ரூபாயும் கிடைக்கிறது.

இலங்கை—இந்தியா 'மோட்டார் படகு' சர்வீசை நடத்தும் இரயில்வே போர்டு, 'இரயில்—கப்பல் இணைப்பு' துறையை கண்டிப்பாக வேறொரு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று அதிகாரிகள் கருதுகின்றனராம்.

கடல் துரிதமாக முன்னேறி வருவதினால், தனுஷ்கோடி துறைமுகத்தை வேறு எந்த இடத்திற்கு மாற்றுவது என்பதைப் பரிசீலிக்க மத்திய சர்க்கார் ஒரு குழுவை நியமித்துள்ளது.

போலீஸ் குழு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்டதும், போலீஸ் குறுக்கிட்டு, உழவர்களிடமிருந்த நெல்லையும், வைக்கோலையும் பறித்து, சிக்கல் தீருகிற வரையில் மேற்படி பொருட்கள் கிராம மணியக்காரரின் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென, அவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வகையில் 15 நபர்களை போலீஸ் கைது செய்து கடத்திக் கொண்டு வரும்பொழுது, வேறு சிலர் போலீஸ் குழுவினரை வளைத்துக்கொண்டு தாக்கினதாகவும், அதன் பலனாக ஒரு ஹெட் கான்ஸ்டேபிள் காயப்பட்டிருப்பதாகவும், மேலும் 5 நபர்களைக் கைது செய்திருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

முடிவு செய்யவில்லை!

நியூயார்க், பிப். 15—

இன்று கூடிய ஐ நா. சபையின் பாதுகாப்புச் சபைக் கூட்டம், பார்மோசா தீவுபற்றி மேற்கொண்டு எந்தவிதமான முடிவும் செய்யாமல், காலவரையறையில்லாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.